## September 27, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளுக்கு 100 சதவீதம் வரி விதிக்க உள்ளதாக அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார். இந்த வரி விதிப்பு நடைமுறை அக்.1-ஆம் தேதிமுதல் அமலுக்கு வரவுள்ளது.
   i. இந்த வரிவிதிப்பால் இந்தியாவுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது என மருந்து தயாரிப்புத் துறை நிபுணர்கள் தெரிவித்தனர்.
   ii. இறக்குமதி மருந்துகளுக்கான வரி விதிப்பு குறித்து ட்ரூத் சமூக வலைதளத்தில் டிரம்ப் வெளியிட்ட பதிவில், 'மருந்துகளுக்கு அக்.1 முதல் 100 சதவீதம் வரி விதிக்கப்படவுள்ளது. எந்தவொரு நிறுவனத்தின் பிராண்டட் மற்றும் காப்புரிமை பெற்ற மருந்து பொருள்களுக்கு இந்த வரி வதிப்பு பொருந்தும்.
   iii. ஆனால், அமெரிக்காவில் மருந்துகள் தயாரிப்பதற்கான ஆலையைக் கட்டமைப்பதற்கான பணிகளைத் தொடங்கிய நிறுவனங்களுக்கு இந்த வரி விதிப்பு பொருந்தாது.
   iv. அதேபோல் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து கனரக வாகனங்களுக்கும் 25 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. அமெரிக்க உள்நாட்டுச் சந்தைகளில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கனரசு வாகனங்களின் ஆதிக்கத்தைக் குறைந்து அமெரிக்க தொழிற்சாலைகளைப் பாதுகாக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
   v. இதன்மூலம் அமெரிக்காவைச் சேர்ந்த பீட்டர்பில்ட், கென்வொர்த், ஃபிரைட்லைனர், மாக்டிரக்ஸ் ஆகிய நிறுவனங்கள் பெரிதும் பலனடையும்.
2. தில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை ரஷிய துணைப் பிரதமர் திமித்ரி பாத்ருஷெவ் சந்தித்துப் பேசினார். அப்போது, வேளாண்மை, உரங்கள், உணவு பதப்படுத்துதல் உள்பட பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசனை மேற்கொண்டனர்.
   i. அமெரிக்காவின் எச்சரிக்கையைமீறி, ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதற்காக, இந்தியா மீது 50 சதவீத இறக்குமதி வரியை அதிபர் டிரம்ப் அண்மையில் விதித்தார். மேலும், ரஷியா உடனான இந்தியாவின் எரிசக்தி தொடர்புகள் குறித்து அவர் தொடர்ந்து கவலை தெரிவித்து வருகிறார். இந்தியா மீதான அமெரிக்காவின் உச்சபட்ச வரி விதிப்பால் இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் எதிர் மறை தாக்கம் ஏற்பட்டுள்ளது.
   ii. இந்தச் சூழலில், இந்தியா-ரஷியா இடையிலான 23-ஆவது வருடாந்திர மாநாட்டில் பங்கேற்க ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் டிசம்பரில் இந்தியாவுக்கு வருகை தரவுள்ளார். அவரது பயணத்துக்கான முன்னேற்பாடுகளின் ஒரு பகுதியாக, ரஷிய துணைப் பிரதமர் திமித்ரி பாத்ருஷெவ் தலைமையிலான அந்நாட்டுக் குழு இந்தியாவுக்கு வந்துள்ளது.
   iii. ரஷியாவில் இருந்து உரங்கள், மஞ்சள் பட்டாணி, சூரிய காந்தி மற்றும் சோயா பீன்ஸ் எண்ணெய் இறக்குமதி கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. கடந்த 2023-24 காலகட்டத்தில் ரஷியாவில் இருந்து உர இறக்குமதி 26 சதவீதமாக உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.
3. இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை (எஃப்டிஏ) இறுதி செய்ய இத்தாலி ஆதரவளிப்பதாக அந்நாட்டு துணைப் பிரதமர் அன்டோனியோ தஜானி தெரிவித்தார்.
   i. இதுகுறித்து எக்ஸ் வலைதளத்தில் அவர் வெளியிட்ட பதிவில், 'இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ்கோயலுடனான சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தியா- இத்தாலி

இடையே அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாகவலுவான நட்புறவு நீடித்துவருகிறது. நான் இந்திய பயணம் மேற்கொள்ளும்போது இதை மேலும் மேம்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்.

ii. இந்தியாவுக்கு நாங்கள் அளிக்கும் முன்னுரிமை காரணமாகவே இத்தாலியின் ஏற்றுமதி நிறுவனங்களுக்கு ரூ.51,800 கோடி (500 மில்லியன் யூரோ) வழங்கி ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேசமயம் இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைவில் இறுதி செய்ய இத்தாலி ஆதரவளிக்கும் என உறுதிப்படுத்துகிறேன்' என குறிப்பிட்டார்.

4. மிக்-21 போர் விமானம் தேசத்தின் பெருமை. இந்தியா - ரஷியா இடையேயான ஆழமான உறவுக்கான சான்று' என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ் நாத்சிங் பெருமிதம் தெரிவித்தார்.

i. இந்த ரஷிய தயாரிப்பு விமானம் இந்திய விமானப்படை பயன்பாட் டிலிருந்து முழுமையாக விடுவிக்கப்படும் நிகழ்வில் பேசியபோது இக்கருத்தை அவர் தெரிவித்தார்.

ii. 1971-இல் பாகிஸ்தானுடனான போர், 1999-ஆம் ஆண்டு கார்கில் போர், 2019 ஆம் ஆண்டு பாலாகோட் தாக்குதலிலும் மிக்-21 போர் விமானம் முக்கியப் பங்காற்றியது என்று அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

5. உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, காவிரியிலிருந்து தமிழகத்துக்கு அக்டோபர் மாதத்தில் 20.22 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது.

i. தமிழகம், கர்நாடக இடையே காவிரி நதிநீர்ப் பங்கிட்டு பிரச்னை பல ஆண்டுகளாக நிலவிவந்த நிலையில், இது தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் 2018-ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. அப்போது கர்நாடகம் எந்தெந்த மாதங்களில் எவ்வளவு நீரை தமிழகத்துக்குத் திறந்துவிட வேண்டும் என்பதை அந்தத் தீர்ப்பின் மூலம் உச்சநீதிமன்றம் நிர்ணயம் செய்தது.

ii. அந்தத் தீர்ப்பை அமல்படுத்தவும், காவிரி நீர்ப் பங்கீட்டை கண்காணிக்கவும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய இரு அமைப்புகளையும் உச்சநீதிமன்றம் அமைத்தது.

iii. அதன்படி, இந்த இரு அமைப்புகளும் அவ்வப்போது கூடி காவிரி நீர்ப் பங்கீடு தொடர்பாக உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி உத்தரவுகளைப் பிறப்பித்து வருகின்றன.

iv. இந்நிலையில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 44 ஆவது கூட்டம் தில்லியில் நடைபெற்றது. காவிரி நீர் மேலாண்மை ஆணைய அலுவலகத்தில் தேரடி மற்றும் காணொலி மூலம் ஆணையத்தில் தலைவர் எஸ்.கே. ஹல்தார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

v. இக்கூட்டத்தில் தமிழகம் சார்பில் நீர்வளத் துறைச் செயலர் ஜெ.ஜெ யகாந்தன், காவிரி தொழில்நுட்பக் குழுத் தலைவர் இரா. சுப்பிரமணியம் ஆகியோர் சென்னை தலைமைச் செய வகத்திலிருந்து காணொலி மூலம் கலந்துகொண்டனர்.

vi. நீர்வளத் துறைச் செயலர் ஜெ.ஜெயகாந்தன் இக்கூட்டத்தின்போது, தற்போது (25.09.2025) மேட்டூர் அணையின் நீர் இருப்பு 92.105 டிஎம்சியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 8,419 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 9,033 கன அடி நீர் விவசாயம், குடிநீர் மற்றும் தொழிற்சாலைப் பயன்பாட்டுக்காகத் திறந்துவிடப்படுகிறது என்று தெரிவித்தார்.

vii. மேலும், கர்நாடக அணைகளின் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்து கணிசமான

அளவு தொடர்ந்து வருவதால், தமிழகத்துக்கு நிகழாண்டு அக்டோபர் மாதத்துக்கு வழங்கப்பட வேண்டிய நீர் அளவான 20.22 டிஎம்சி நீரை உச்சநீதிமன்ற ஆணையின்படி கர்நாடகம் பில்லிகுண்டுலுவில் வழங்குவதை உறுதி செய்யுமாறு ஆணையத்தை வலியுறுத்தினார்.

viii. இதையடுத்து, உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி தமிழகத்துக்கு அக்டோபர் மாதம் 20.22 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என்று காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது.

6. உலக ரேலி- ரேப்பிட் சாம்பியன்ஷிப் மோட்டார்பைக் போட்டிக்கு ஆசியா விலிருந்து தகுதி பெற்ற முதல் வீராங்கனையாக, டி.வி.எஸ் ரேஸிங்கை சேர்ந்த ஐஸ்வர்யா பிஸ்ஸே சாதனை படைத்தார்.
   i. இந்த சாம்பியன்ஷிப்பில் நடப்பு சீசனில் மொத்தம் 5 பந்தயங்கள் நடைபெறும் நிலையில், 4-ஆவ தாக போர்ச்சுகலில் நடைபெறும் பிபி அல்டிமேட் ரேலி -ரேப்பிட் பந்தயத்தில் அவர் களம் கண்டுள்ளார். 28-ஆம் தேதி வரை நடை பெறவுள்ள இந்தப் பந்தயத்தில், போட்டியாளர்கள் மொத்தமாக 2,000 கி.மீ. தொலைவை 5 நிலைகளாக சவால்மிக்க டிராக்கில் கடக்கவுள்ளனர்.
   ii. அடுத்ததாக மொராக்கோ ரேலி யில் பங்கேற்கவிருக்கும் அவர், 2026 டாகர் ரேலியில் இடம்பிடிப்பதே தனது இலக்கு என்றார்.

7. ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் (புது டெல்லி) இந்தியாவுக்கு இரு பிரிவுகளில் பதக்கம் கிடைத்தது.
   i. 10 மீட்டர் ஏர் பிஸ்டல் ஆடவர் தனிநபர் பிரிவில், ஜோனதன் காவின் ஆன்டனி 244.8 புள்ளிகளுடன் தங்கம் வென்றார்.
   ii. அதிலேயே மகளிர் தனிநபர் பிரிவில், ராஷ்மிகா சாகல் 236 புள்ளி களுடன் வெள்ளி பெற்றார்.

8. இந்திய அட்டர்னி ஜெனரல் (மத்திய அரசின் தலைமை வழக்குரைஞர்) ஆர்.வெங்கடரமணியின் பதவிக்காலம் மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
   i. கடந்த 2022-ஆம் ஆண்டு அட்டர்னி ஜெனரலாக 3 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்ட அவரின் பதவிக்காலம் வரும் செப்.30-ஆம் தேதியுடன் நிறைவடைய உள்ளது. இந்நிலையில், அவரின் பதவிக்காலம் மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய சட்ட அமைச்சகம் அறிவித்தது.
   ii. அட்டர்னி ஜெனரல் என்பது அரசியல் சாசன பதவியாகும். மத்திய அரசு பரிந்துரையின்படி, அட்டர்னி ஜெனரலை குடியரசுத் தலைவர் நியமிப்பார். நாட்டின் எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்குரைஞராக ஆஜராகும் உரிமை அட்டர்னி ஜெனரலுக்கு உள்ளது. இந்தப் பதவியில் உள்ளவர் அரசு வழக்குகளை கையாள்வதுடன், சிக்கலான சட்ட பிரச்னைகளில் அரசுக்கு ஆலோசனையும் வழங்குவார்.

9. 'பிரிக்ஸ்' கூட்டமைப்பில் இடம்பெற பாலஸ்தீனம் விண்ணப்பித்துள்ளதாக, ரஷியாவுக்கான பாலஸ்தீன தூதர் அப்தல் ஹஃபீஸ் நோஃபல் தெரிவித்தார்.
   i. பிரிக்ஸ் கூட்டமைப்பில் பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா (பிரிக்ஸ்) ஆகிய 5 முதன்மை நாடுகளுடன் எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா ஆகிய கூடுதல் உறுப்பு நாடுகளும் இடம்பெற்றுள்ளன.
   ii. முக்கியமான வளரும் நாடுகளைக் கொண்ட இக் கூட்டமைப்பில் இணைய பாலஸ்தீனம் விண்ணப்பித்துள்ளது. கனடா, ஆஸ்திரேலியா, போர்சுகல், பிரிட்டன் ஆகிய நாடுகள், பாலஸ்தீனத்தை தனிநாடாக அண்மையில் அங்கீகரித்த நிலையில், இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

iii. பிரிக்ஸ்' கூட்டமைப்பில் இடம்பெற பாலஸ்தீனம் விண்ணப்பித்ததற்கு சீனா வரவேற்பு.

10. பிகாரில் சுயதொழில் தொடங்க 75 லட்சம் பெண்களுக்கு தலா ரூ.10,000 நிதியுதவி வழங்கும் 'முதல்வரின் மகளிர் வேலைவாய்ப்புத் திட்டத்தை' பிரதமர் மோடி காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.
    i. பிகாரில் தொடங்கப்பட்டுள்ள முதல்வரின் மகளிர் வேலை வாய்ப்பு திட்டம், மத்திய அரசின் லட்சாதிபதி சகோதரி திட்டத்துக்கு வலுசேர்க்கும். இந்த நிதியுதவியின்கீழ், பிகார் பெண்கள் மளிகை, பாத்திரம், அழகுசாதனப் பொருள்கள், பொம்மை கடைகளைத் திறக்கலாம். கால்நடை வளர்ப்பு, கோழிப் பண்ணைத் தொழிலிலும் ஈடுபடலாம்.

11. லடாக் யூனியன் பிரதே செதனுக்கு மாநில அந்தஸ்து, ஆறா வது அட்டவணை அந்தஸ்து கோரி போராட்டம்நடத்திவந்த பருவநிலை ஆர்வலர் சோனம் வாங்சுக்கை போலீஸார் கைது செய்தனர்.